திரு. எம். தேவராசன்: இந்த அருந்ததியர்களில் பெரும்பாலோர் செருப்புத் தைக்கும் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நலத்துறை மூலமாக செருப்புத் தைக்கும் கருவிகள் இலவசமாகப் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அதைப் பற்றியெல்லாந் தான் விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. காலணிகள் தைக்க தோல் வாங்குவதற்கும் இதர பொருள்கள் வாங்குவதற்கும் 500 ரூபாய் அருந்ததியர்களுக்கு வட்டி இல்லாத கடனாகத் தரப்படுகிறது. அவர்களுக் கென்று தனியாக தோல் பதனிடும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் வர்த்தகத் துறை மூலமாக ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திரு. மு. இரத்தினசபாபதி: அருந்ததியர்களுக்குத் தலைமுறை தலை முறையாகச் செய்து வந்த தொழில்களுக்குத்தான் சலுகைகள் அளிக்கப் பட்டு வருகின்றன. அவர்கள் சமூகத்தில் முன்னேற மாற்றமான தொழில் கள் செய்வதற்கு அவர்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: யாரும் எந்தவித மாற்றங் களுக்கும் ஆளாகக் கூடாது, இடம் பெறக்கூடாது என்ற தடை இல்லை. அருந்ததியர்களும் அரசாங்கம் தரும் எல்லாவிதமான முன்னேற்றங்கள் அனைத்திலும் பங்கு பெற உரிமை இருக்கிறது. குறிப்பிட்ட சில குடும்பங் கள் சில பகுதிகளில் பழைய தொழிலையே செய்ய வேண்டுமென்று இருப்பவர்களுக்குத்தான் இந்தச் சலுகைகள் தரப்படுகின்றன. அருந்ததி யர்களில் எவ்வளவோ பேர் டாக்டர்களாக இருக்கிறார்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருக்கிறார்கள், பெரிய பதவிகளில் எல்லாம் இருக்கிறார்கள் என்று நான் அறிந்த வரையில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

Distribution of Essential Commodities.

*486 *Q.*—Thiru N.K. PALANISAMY : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to distribute essential articles like pulses, sugar etc., to the people through fair price shops ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: "லெவி" சர்க்கரை 1972-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலிருந்து குடும்ப அட்டைகள் மூலம், பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது சர்க்கரை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 2·15 ஆகும். கோதுமை, கோதுமைப் பொருட்கள், மைதா, ரவை ஆகியவையும் தேவையுள்ள இடங்களில் இந்த அட்டை களுக்கு வழங்கப்படுகின்றன. சென்னை மாநகரில் பருப்பு வகைகள் போன்ற ஏனைய சில பொருட்கள் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகத்தின் சில்லறைக் கடைகள், பயன் துய்ப்போர் (மகளிர்) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இன்றியமையாப் பொருட்களை வழங்க, முதற்கண் கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சி, சேலம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, கன்னியாகுமரி, செங்கற்பட்டு மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் இத்தகைய கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

1973 மார்ச் 23]

திரு. என். கே. பழனிசாமி : இந்த அத்தியாவசியப் பொருள்களான பருப்பு, அரிசி, எண்ணெய் போன்ற பொருள்கள் சென்னையில்தான் விநியோகிக்கப்படுகிறது. மாவட்டங்களில் இவற்றின் விலைகள் குறைவாகவா இருக்கிறது. அதிகமாகத்தானே இருக்கிறது. எனவே கிராமப் புறங்களில் இம்மாதிரி நிவாரணக் கடைகள் வைத்து—சீமெண்ணெயை எடுத்துக்கொண்டால் கண்ட்ரோல் விலை ஒரு லிட்டருக்கு 60 பைசா என்றால் அங்கு அது லிட்டருக்கு 2·50 ரூபாய் வரை விற்கப்படுகிறது. எனவே மக்களுக்கு அவற்றை அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இருப்பதால் எல்லா இடங்களிலுமே நியாயவிலைக் கடைகள் வைத்து இப்படிப்பட்ட அத்தியாயமான பொருள்களை கண்ட்ரோல் விலைக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்வதற்கு அரசுக்கு என்ன தடங்கல் இருக்கிறது? முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் எல்லாக் கிராமங்களிலும் அப்படிச் செய்வதற்கு திட்டம் போட்டாகிவிட்டது. அதற்கான பொருள்களை வாங்க ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம். அரிசியைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு முழுவதும் கொடுக்கமுடியும். மற்றபடி துவரம்பருப்பு போன்றவைகளை வேறு மாநிலங்களில் இருந்து வாங்கி வரவேண்டியிருக்கிறது. அதற்கு இரண்டொரு மாதங்களாகும் என்று தெரிகிறது. உளுந்து, துவரம்பருப்பு போன்றவைகள் வாங்க ஏற்பாடு கூட்டுறவு சங்கம் மூலம் ஒப்பந்தம் செய்திருக்கிறோம். இரண்டொரு திங்களில் அதைப் பெற்று மற்ற இடங்களில் துவக்க ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறோம். மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையில் விலை உயர்வு என்றார்கள். எங்கு எந்த இடத்தில் அப்படி இருக்கிறது என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மண்ணெண்ணெய், தமிழ்நாடு பூராவும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் கொடுப்பதற்கு அட்டை அடையாளம் வைத்து ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒருசில இடங்களில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் தயவுசெய்து உறுப்பினர்கள் எனக்கு துரிதமாக ஆங்காங்குள்ள குறைபாடுகளைப் பற்றித் தெரிவித்தால் நான் இரண்டு நாட்களுக்குள் அல்லது ஒரு நாளில் நடவடிக்கை எடுக்கிறேன்.

2. அரை மணி நேர விவாதம் கோரல்

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் இது விவாதிக்கப்படவேண்டிய ஒரு காரியம் என்ற முறையில் 40-வது விதியின் அடிப்படையில் இதில் ஒரு அரை மணி நேர விவாதத்திற்கு தாங்கள் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விதி 40—

"No discussion shall be permitted at question time in respect of a question or of any answer given to a question:

Provided that on request made to the Speaker at question-time, the Speaker may, in his discretion allow half an hour after the conclusion of the business of the day or any other day as may be fixed by the Speaker to enable a member to raise a debate on any matter of urgent importance which has been the subject of a question. No vote shall be taken on such debate and such time shall not be available for the transaction of any other business".